# வேளாண்மை
# நிதி நிலை அறிக்கை
# 2024 - 2025

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்

## திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

அவர்களின் உரை



திருவள்ளுவர் ஆண்டு 2055, சோபகிருது - மாசித் திங்கள் 8 ஆம் நாள்

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள்

**மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே,**

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர் (திருக்குறள்–1033)**

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

மற்ற சமூகங்கள் உழவர்களையும் உழைப்பாளர்களையும் சமூக நிலையில் கடைசி இடத்தில் வைத்திருக்கும்போது, நம் தமிழ்ச் சமூகம் உழவர்களை உச்சத்தில் வைத்து உச்சி முகர்ந்ததையும், '**உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோராகப்**' போற்றியதையும் நம் தமிழ் இலக்கியங்கள் தெள்ளெனக் காட்டுகின்றன. இதனை ஒட்டியே, இந்த அரசும் உழவர்களை உச்சத்தில் வைத்து, வேளாண்மைக்கெனத் தனி நிதி நிலை அறிக்கையினைத் தயார் செய்து சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உழவர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நோக்கோடு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, இத்துறையின் 2024-2025-ஆம் ஆண்டிற்கான தனி வேளாண் நிதிநிலை அறிக்கையினை இம்மாமன்றத்தில் அளிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

முதன்முறையாக ஒன்றை உருவாக்குவது கடினம்; அதை வளர்ந்திடச் செய்வது எளிது; பாதை அமைப்பது கடினம்; பயணம் செய்வது எளிது. நாங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத வேளாண்மை நிதிநிலை அறிக்கையை உருவாக்கி

அளித்து, எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையானது உழவர்தம் வாழ்க்கையை மேன்மேலும் வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**"மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை**
**ஆழி தரித்தே அருளும்கை - சூழ்வினையை**
**நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி**
**காக்கும்கை காராளர் கை"**

ஏர்ப்பிடித்து உழவு செய்யும் உழவரின் கைகளே, மக்களின் பசிப்பிணியைப் போக்கி நீடூழி வாழ வைக்கும் கைகள் என்று கம்பர் உழவுத் தொழிலை மிகவும் உயர்த்தி "**திருக்கை வழக்கம்**" என்ற நூலில் சிறப்பிக்கிறார்.

முழுமுதல் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில், வேளாண்மை பற்றியும், அதன் நுட்பங்கள் பற்றியும் விளக்கியுள்ளார் இளங்கோவடிகள். மன்னராட்சியும், மக்கள் பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற விளங்க வேண்டும். மன்னனும், மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பதனை,

**"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்**
**உழவிடை விளைப்போர்"**

**(சிலப்பதிகாரம் – நாடுகாண்காதை - 150)**

-என்று குறிப்பிடுகிறார்.

இதைத்தான், அமெரிக்காவின் முதல் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களும், "மனிதன் ஆற்றக்கூடிய தொழில்களிலேயே மிகவும் நலமிக்கதும், பயனுள்ளதும்,

உன்னதமானதுமான தொழில் வேளாண்மையாகும்" (**Agriculture is the most healthful, most useful and most noble employment of man**) என்று வழிமொழிகிறார்.

அல்லும் பகலும், அயராது உழைத்து, உலகோரின் அச்சாணியாகத் திகழும் மேன்மையுடைய, வேளாண் பெருங்குடி மக்களைப் போற்றும் விதமாக, வேளாண்மை கடந்துவந்த பாதைகளை இம்மாமன்றத்தில் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது வரலாற்று ஆவணங்களில் விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடைகளை வளர்த்தல் ஆகியவற்றைக் கற்கால மனிதர்கள் மேற்கொண்டதற்கான தகவல்களோடு "**மெய்திரி வகையின் எண்வகை உணவில் செய்தியும் வரையார்**" என்று தொல்காப்பியர் கூறியுள்ளதிலிருந்து நெல், புல்லரிசி, காடைக்கண்ணி (சிறுதானியம்), உளுந்து, அவரை போன்றவற்றைப் பயிரிட்டுள்ளதற்கான ஆதாரங்கள், ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புகளிலிருந்து காணமுடிகின்றது. பின்னர், பட்டறிவாலும், படிப்பறிவாலும் பயிர் வளர்ப்பு தொடர்பான நுணுக்கங்கள் பெறப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

மேலும், நம் முன்னோர்கள் பயிர் செய்வதும், உணவு உண்பதும் என்று மேலோட்டமான வாழ்வை வாழாது, ஒவ்வொரு செயலுக்கும் முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, நுட்பமாகக் கண்டறிந்து, தங்களுடைய வேளாண் அறிவை வளர்த்துக்கொண்டிருப்பதை சங்க இலக்கியங்கள் மூலம் மிக எளிதாக நாம் உணரலாம்.

உணவு உற்பத்தியின் உன்னதத்தை உலகப் புகழ்பெற்ற பசுமைப்புரட்சி விஞ்ஞானி **பாரத ரத்னா எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், "எதிர்காலம் தானியங்களை அதிகம் கொண்ட நாடுகளுக்கு உரியதே தவிர, துப்பாக்கிகளை அதிகம் கொண்ட நாடுகளுக்கு அல்ல"** (The future belongs to nations with grains and not guns) என்று தெரிவித்துள்ளார்.

வேளாண் பெருங்குடி மக்கள், தங்களின் உழைப்பிற்கேற்ற பலன்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில், வேளாண்மையை வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாக மாற்றி, உழவர்களின் நலனைப் பேணிக்காக்க நேசக்கரத்துடன் பல உன்னதத் திட்டங்களை வழங்கி, நடைமுறைப்படுத்தி வருபவர் நமது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.**

வேளாண்மைத் துறையை, "**வேளாண்மை – உழவர் நலத்துறை**" எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் உற்பத்தியுடன் நின்று விடாமல், உழவர் பெருமக்களின் நலனிற்கு முக்கியத்துவம் அளித்தவரும் நம்முடைய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான்.**

**வேளாண் தொழிலில் சவால்களை எதிர்கொண்டு வரும் விதம்**

வேளாண்மையில் தற்போதுள்ள சவால்களைச் சாதனைகளாக மாற்றி, அதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பேணிக் காத்திட, பல அரிய திட்டங்கள் வேளாண்மை-உழவர் நலத்துறையால் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேளாண்மைக்கான தொலை நோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக 2020-2021-இல் 152 இலட்சம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2022-2023-ஆம் ஆண்டில் 155 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

அரசால் செயல்படுத்தப்பட்ட சீர்மிகு திட்டங்களால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், ஊக்கத்துடன் செய்திட்ட சாகுபடியால், 2022-2023-ஆம் ஆண்டில் 116 இலட்சத்து 91 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலிருந்த பாசன மின் இணைப்பிற்கான விண்ணப்பங்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, நடப்பாண்டிலும் மேலும் 50,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேளாண் தொழிலை மேற்கொள்ள இளைஞர்களிடம் ஆர்வம் ஏற்படுத்துவது மிகவும் அவசியம். இளைஞர்கள்தான், எந்த ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் முதுகெலும்பாவர். வேளாண் சார்ந்த தொழில்களின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் என்பதால், 2021-2022-ஆம் ஆண்டு முதல் 268 வேளாண் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, அக்ரி கிளினிக் உள்ளிட்ட வேளாண் சார்ந்த

தொழில்களைத் தொடங்கி நடத்தி வேளாண்மைக்கு வலு சேர்த்து வருகின்றனர்.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட நம்முடைய அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல் சன்ன இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 107 ரூபாயும், சாதாரண இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 82 ரூபாயும் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, 45 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பயறுவகைகள், கொப்பரைத் தேங்காய் ஆகியவையும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு, கரும்பிற்கு ஒரு மெட்ரிக் டன்னிற்கு ஊக்கத்தொகையாக 195 ரூபாய் வீதம் 260 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட ஏதுவாக உழவர் சந்தைகள், மின்னணு சந்தைகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகியவை செயல்படுகின்றன. இதனால், வேளாண் பெருங்குடி மக்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை அளிக்கப்பட்டு, அவர்களுக்கான வாய்ப்புகள் மேன்மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிர் சாகுபடியில், இடுபொருட்களுக்கான செலவினத்தைவிட, வேளாண் பணிகளுக்கான ஊதியம் தற்போது அதிகமாக உள்ளது. இதனை எதிர்கொள்ள, வேளாண் பணிகளுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மூலமாக வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்குப் பெற்றுப் பயனடையும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தடுத்திட ஏதுவாக, இந்த அரசு, புதிய குளிரூட்டப்பட்ட கிடங்குகள், தானிய சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் உள்ளிட்ட வசதிகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கை - ஒரு பார்வை**

கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் சரிவரச் செயல்படுத்தப்பட்டு, எதிர்பார்த்த பலன்களைத் தந்துள்ளன. நீண்ட காலத் திட்டங்களுக்கான பணிகள் தகுந்த மேற்பார்வையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை-உழவர் நலத்துறைத் திட்டங்களோடு, உழவர் நலன் தொடர்புடைய பிற துறைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து கலைஞரின் அனைத்துக் கிராம

ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் 7,705 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை, 23,237 ஏக்கர் பரப்பளவில் வேளாண் பயிர்களும், 3,587 ஏக்கர் பரப்பளவில் பழமரக்கன்றுகள், மரங்கள் முதலியவையும் நடப்பட்டு, தரிசு நிலங்கள் நிரந்தர சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,202 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், **1,564 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டு பாசனப்பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 4,773 குளங்கள், ஊருணிகள், வரத்துக்கால்வாய்கள் எல்லாம் இத்திட்டத்தின் மூலம் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.**

எளியோரையும் ஏற்றமடையச் செய்யவேண்டும் என்ற நோக்கில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், பசுமைக் குடில், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்ற உயர் மதிப்புத் திட்டங்களுக்கு 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் திட்டம் 2022-2023-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றதால், 2022-2023, 2023-2024-ஆம் ஆண்டுகளில், அறிவிக்கப்பட்ட 17 கோடி ரூபாயை விடக் கூடுதலாக 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 4,980 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் நீர் நிலைகளைத் தூர் வாரியும், புனரமைத்தும், சீரமைத்து, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி, மழை நீரை வீணாக்காமல் சேமித்து, நிலத்தடி நீரைச் செறிவூட்டியதால், நுண்ணீர்ப்பாசனம் போன்ற தொழில்நுட்பங்களைப் பரவலாக்கி, பாசன நீரின் பயன்பாட்டினை அதிகரித்ததால் **2020-2021-ஆம் ஆண்டில் 89 இலட்சத்து ஆறாயிரம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற பயிர் பரப்பு, 2022-2023- ஆம் ஆண்டில் 95 இலட்சத்து 39 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.**

**பேரவைத்தலைவர் அவர்களே!**

கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கைகளானவை பாலன், மீளி, மறவோன், திறவோன் போன்று தவழ்ந்து, நடந்து, ஓடிவிளையாடி நம்மை மகிழ்வித்தன. இந்த நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையானது புதுத்தெம்பு கொண்டு பொலிவுடன் தாவிக் குதிக்கும் குழந்தையாக உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணை வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தொடர்ந்து உணரப்படுகின்றன. மேலும், 2024-2025-ஆம் ஆண்டிற்கும் தகுந்த புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

**உழவர் நலன்**

பருவநிலை மாற்றத்தின் காரணமாக, தமிழ்நாட்டில் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஆண்டுதோறும் நேரிட்டு பயிர் உற்பத்தியையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளினால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திட, 25 இலட்சம் விவசாயிகளுக்கு **பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக** இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை, 4,436 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் விதைப்பு பொய்த்தல் இனத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா நெற்பயிருக்கு 2022-2023, 2023-2024-ஆம் ஆண்டுகளில் பயிர் இழப்பு ஏற்பட்ட அதே ஆண்டிலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், கடந்த 2022-2023-ஆம் ஆண்டில், தென்மேற்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, பருவம் தவறிப் பெய்த மழை, வறட்சி, கடந்த மார்ச் 2023-இல் பெய்த ஆலங்கட்டி மழை ஆகிய இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்திற்கு, 380 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 4 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. குறுவைப் (காரீஃப்) பருவத்தில் ஏற்பட்ட மகசூல் இழப்பு, மிக்ஜாம் புயல்,

மக்காச்சோளப்பயிரில் ஏற்பட்ட மகசூல் இழப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 85 ஆயிரம் விவசாயிகளுக்கு 118 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கோடை மழை, தென்காசி மாவட்டத்தில் தென் மேற்குப் பருவமழை காலத்தில் மழை குறைவால் ஏற்பட்ட மகசூல் இழப்பு, **தென் மாவட்டங்களில் 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு 208 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 2 இலட்சத்து 74 ஆயிரம் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படும்.**

மேட்டூர் அணையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்தபோதிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரிய நிகழ்வாக மேட்டூர் அணையிலிருந்து 03.02.2024 அன்று டெல்டா பாசனத்திற்காக 3 டி.எம்.சி தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டதால், பாதிக்கும் நிலையிலிருந்த சுமார் 25,000 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

பல்வேறு உழவர் நலன் குறித்த திட்டங்கள், வேளாண் இயந்திரங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் கொண்ட மாபெரும் கண்காட்சிகள் சென்னையிலும், திருச்சியிலும் நடைபெற்றன. இவற்றில் மொத்தமாக, இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான

விவசாயிகளும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் பார்வையிட்டு, பங்கேற்றுப் பயனடைந்தனர்.

**சாதனைகள்**

இருபோகச் சாகுபடிப் பரப்பை இருமடங்காக்கும் முயற்சியில், 2022-2023-ஆம் ஆண்டு 35 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கராக இருபோகச் சாகுபடிப் பரப்பு உயர்ந்துள்ளது. கரும்புப் பயிரில் உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து எக்டருக்கு 111 மெட்ரிக் டன் உற்பத்தித்திறனுடன் தமிழ்நாடு, தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.

நடப்பாண்டில் ஏற்பட்ட பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும், **114 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர்** பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் ஆண்டில் 127 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியினை எட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த மூன்றாண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த சிறப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயச் சங்கங்கள், கரும்பு விவசாயிகள் சங்கங்கள், விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், இயற்கை விவசாயிகள், தோட்டக்கலை விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், வேளாண்

இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனப் பிரதிநிதிகள், வேளாண் வணிகர்கள், வேளாண் ஏற்றுமதியாளர்கள், முட்டை, பால் உற்பத்தியாளர்கள், கடல்சார் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், வேளாண் வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துகளை நேரடியாகவும் மனுக்கள், மின்னஞ்சல் மூலமாகவும் பெற்று அவர்கள் கருத்துகளுக்கும் ஏற்ப 2024-2025-ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுகிறது.

## வேளாண்மைத்துறை

### 1) முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS)

**இந்த நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற புதிய திட்டத்தினை இப்பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.**

வேளாண்மைக்கு மண்ணே ஆதாரம். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை மண். பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை கிடைக்கக்கூடிய வடிவில் அளிப்பதும் மண்தான். பயிர்களின் வளர்ச்சி, மண்ணின் வளத்தைச்சார்ந்தே அமைகிறது. இதைத்தான்,

*"சாரல் சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு"*

என்னும் குறுந்தொகைப்பாடல், மண்வளம் செழிப்பாக இருந்ததால்தான் மரங்களில் பெரிய பலாப்பழங்கள் காய்த்துத் தொங்கின என்று கூறியுள்ளது.

பண்டைய காலத்தில் காடுகளைத் தேவைக்கேற்ப அழித்து வேளாண்மை செய்தபோது நாளடைவில் உற்பத்தி குறைந்தது. அது மண்வளம் குன்றியதால் ஏற்பட்டது என்பதை உணர்ந்தே நம் மூத்தகுடிகள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வேளாண்மை (Shifting Cultivation) செய்தனர் என்பதை அறியமுடிகிறது. பின்னர், எரு இடுதலின் மூலம் மண் வளத்தைக் கூட்டலாம் என்பதை,

"**கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**
**தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய**"

-என்று புறநானூறு கூறுவதிலிருந்து அறியலாம்.

தற்போதுள்ள தொழில்முறை வேளாண்மையில், ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதாலும், மண்ணிலிருந்து சத்துகளை அதிகம் உறிஞ்சும் பயிர்களைச் சாகுபடி செய்வதாலும், மண்ணின் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இது தவிர, உற்பத்தி அதிகரிப்பிற்கென அதிக அளவில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளமும் நலமும் குன்றியுள்ளன. நிலங்கள் பாழ்பட்டு அதிக அளவில் களர், உவர், அமில நிலங்களாக மாறியுள்ளன. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் மலடான மண்ணைத்தான் நம் எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச்செல்லும் நிலை ஏற்படும்.

வேதிப்பொருட்களின் எச்சம் இல்லாத வேளாண் விளைபொருட்களே நமக்கு நல்லுணவு, அருமருந்து. நல்ல

உணவே உடல் நலன் காக்கும், அதுவே மக்களுக்கு நல்வாழ்வு தரும் என்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளையும் ஊக்கப்படுத்திடவும் பெரும் திட்டம் ஒன்றைத் தீட்டப்பணித்தார்கள். இதற்கென, "**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்**" **என்ற புதிய திட்டம், 2024-2025-ஆம் ஆண்டில், 22 இனங்களுடன் 206 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.**

i) மண்ணில் கரிம கார்பன் உள்ளிட்ட அனைத்துச் சத்துகளும் சரிவிகிதத்தில் இருந்தால் மட்டுமே நுண்ணுயிர்கள் பல்கிப்பெருகி, பயிர்களுக்கு ஊட்டச்சத்துகள் எளிதாகக் கிடைக்கப்பெற்று மகசூல் அதிகரிக்கும். எனவே, **பசுந்தாள் உர உபயோகத்தினை விவசாயிகளிடையே ஊக்குவித்து** மண்வளம் காக்கும் வகையில், ஆயக்கட்டு, இறவைப் பாசனப் பகுதிகளில், **முதற்கட்டமாக 2024-2025-ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், தமிழ்நாட்டிலுள்ள 2 இலட்சம் விவசாயிகள் பயனடைவர்.**

ii) "**தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும்**"

விளையும் நிலத்திற்கு எரு இடாவிட்டால், வயல் விளைச்சலை மறுத்துவிடும் என்று புறநானூறு பகர்கிறது. மேழிச்செல்வம் குறைந்து வரும் நிலையில், மாட்டுச் சாணத்தோடு, வேளாண் கழிவுகளையும் மக்கச் செய்து கிடைக்கும் மண்புழு உரம் முக்கியத்துவம் பெறுகிறது. மண்புழு

உரம், வளமான ஊட்டச் சத்துகளை வழங்குவதோடு மட்டுமின்றி, மண்ணின் தன்மையையும் மேம்படுத்துகிறது. எனவே, மண்புழு உரம் தயாரித்து மண்வளத்தை மேம்படுத்திட, ஒரு விவசாயிக்கு இரண்டு மண்புழு உரப்படுக்கைகள் வீதம் 10,000 விவசாயிகளுக்கு வழங்கிட 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், நிரந்தர மண்புழு உரத் தொட்டிகள் அமைத்து, தொடர்ந்து மண்புழு உரம் தயாரிக்க ஏதுவாக, 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

iii) மண்ணின் வளம் குறித்து அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதற்காக, விவசாயிகள் "**தமிழ் மண்வளம்**" இணையதளம் வழியாக மண் வள அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து, தாங்கள் தேர்வு செய்துள்ள பயிர்களுக்கேற்ப உரப் பரிந்துரைகளையும் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் மண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, சமச்சீர் உரப் பரிந்துரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2024-2025-ஆம் ஆண்டில் 2,482 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 2 இலட்சம் விவசாயிகளின் நிலத்தில் மண்பரிசோதனை செய்து மண்வள அட்டையும், மண்வள மேம்பாட்டிற்கான பரிந்துரையும் வழங்கப்படும். இவ்வாறு, **இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைத்து மண்ணின் வளம் காக்க, 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

iv) களர் நிலத்தில், மண் இறுகியும் காற்றோட்டம் இல்லாமலும், அமில நிலத்தில் நுண்ணுயிர்ச் செயல்பாடுகள் குறைந்தும், பயிர் வளர்ச்சியும், மகசூலும் குறைந்தும் காணப்படுகிறது. இதனைச் சீர்செய்யும் பொருட்டு, **37,500 ஏக்கர் களர் நிலங்களைச் சீர்ப்படுத்த 7 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 37,500 ஏக்கர் அமில நிலங்களைச் சீர்ப்படுத்த 15 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படும்.**

v) திரவ உயிர் உரங்களைப் பயிர்களுக்கு வழங்குவதால் தழை, மணி, சாம்பல், துத்தநாகச் சத்துகளை எளிதில் அளித்து இரசாயன உரச் செலவைக் குறைத்து, சராசரியாக 10 முதல் 20 சதவீதம் கூடுதல் வருவாய் பெறமுடியும். இதற்கென, **2 இலட்சம் விவசாயிகளுக்கு 10 இலட்சம் ஏக்கரில் இடுவதற்காக, 5 இலட்சம் லிட்டர் உயிர் உரங்கள், 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.**

vi) தமிழ்நாட்டில் முக்கிய வேளாண் பயிரான நெற்பயிரில், ஒவ்வொரு நாளும் வேளாண் விரிவாக்கப் பணியாளர்களால் விவசாயிகளுடன் இணைந்து, "**வயல் சூழல் ஆய்வு**" மேற்கொள்ளப்பட்டு, நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, தீமை செய்யும் பூச்சிகள், நீர் மேலாண்மை முறைகள், மண்ணின் வளம், பயிர்களின் வளர்ச்சி நிலைகள், சுற்றுச்சூழல் போன்றவற்றின் அடிப்படையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளும் பரிந்துரைகளும் வழங்கப்படும். இதனால் பயிர்பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டு, இரசாயனங்களின் பயன்பாடு பெருமளவு குறைக்கப்படும். மண்நலம் காக்கப்படும்.

vii) அசாடிராக்டின் மூலப்பொருளைக்கொண்ட வேம்பிலிருந்து கிடைக்கும் பொருட்கள், சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாமல் பூச்சி, நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த வல்லவை. வேப்பிலை பசுந்தழை உரமாகவும் பயன்படுகிறது. **வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் 10 இலட்சம் வேப்ப மரக்கன்றுகள் வேளாண்காடுகள் திட்டத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும். இதற்கென 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

viii) இயற்கையிலேயே உயிரி பூச்சிக்கொல்லி பண்புகளுடைய ஆடாதொடா, நொச்சி போன்ற தாவர வகைகளின் 50 இலட்சம் செடிகளைத் தரிசு நிலங்களிலும் வயல் பரப்புகளிலும் நடவு செய்து பரவலாக்கம் செய்திட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

ix) பழங்காலத்தில் நம் தமிழர்கள் நல்ல உணவுப் பழக்க வழக்கத்தினாலேயே நல்வாழ்வு வாழ்ந்தனர். இதனை ஊக்குவிக்கும் விதமாக, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்ல சீவன் சம்பா போன்ற மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய நெல் இரகங்கள், 2024-2025-ஆம் ஆண்டில் 1,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யும் வகையில் விதை விநியோகம் செய்யப்படும்.

**x) நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில்** பாரம்பரிய நெல் இரகங்களான அறுபதாம் குறுவை, பூங்கார், தூயமல்லி, சீரகசம்பா, மாப்பிள்ளை சம்பா, சீவன் சம்பா, கருப்புக்கவுனி, போன்றவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு

விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 2023-2024-ஆம் ஆண்டில் 20,979 விவசாயிகள் பாரம்பரிய நெல் இரகங்களை 12,400 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்து பயனடைந்தனர். 2024-2025-ஆம் ஆண்டில் மாநில அரசு விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, 2025-2026-ஆம் ஆண்டில், 10,000 ஏக்கரில் சாகுபடி செய்யும் வகையில் 200 மெட்ரிக் டன் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென, 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

xi) புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின்கள் ஆகியவை அதிகம் உள்ள பாரம்பரிய சிறுதானியங்கள், பயறு வகைகள் இரத்தத்தில் சர்க்கரை அளவினைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், உடல் எடையைக் குறைக்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் செய்கின்றன. எனவே, சேலம், கரூர் மாவட்டங்களில் தலைவிரிச்சான் சோளம், வெள்ளை சோளம், இருங்கு சோளம், செஞ்சோளமும், தூத்துக்குடி மாவட்டத்தில் காக்காச்சோளமும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் வெண்சுருட்டை கேழ்வரகு, கருஞ்சுருட்டை கேழ்வரகு, கரிக்கட்டை கேழ்வரகு, பூவாடன் கேழ்வரகு, குருவிக்காரன் கம்பு, காட்டுக்கம்பு, தட்டை வரகு, பெரும்சாமை, சடை சாமை, சிட்டன் சாமை, கருஞ்சிட்டன் சாமை, நாட்டுத் துவரை, மலைத்துவரை ஆகியவற்றையும், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில், நாட்டு உளுந்து, கொடி உளுந்து ஆகிய இரகங்களின் விதைகளையும் கண்டறிந்து சேகரித்து, அரசு மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு

பாரம்பரிய இரகங்கள் பாதுகாக்கப்படும். இவை, புதிய இரகங்களை உருவாக்கிடவும், பயன்பாட்டிலுள்ள இரகங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

xii) உயிர்ம வேளாண்மைக்கான திட்டங்கள், சான்றளிப்பு முறைகள், நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு, இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பிற்கான பயிற்சிகள், உயிர்ம வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள், அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, **உயிர்ம வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணை உருவாக்கப்பட்டு இதர விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இதற்கென 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xiii) 2023-2024-ஆம் ஆண்டில், 36 மாவட்டங்களில் 35,815 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்ட 725 உயிர்ம வேளாண் தொகுப்புகளுக்கு இரண்டாம் ஆண்டிற்கான ஆதரவு வழங்கிட, 27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுமையான உயிர்ம வேளாண் சான்றுடன் கூடிய உயிர்ம வேளாண்மை உறுதி செய்யப்படும். இதனால் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் நேரடி சந்தைப்படுத்துதல் வரை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, கூடுதல் இலாபம் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

xiv) உயிர்ம வேளாண்மைக்கு இன்றியமையாத, பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரம், அமிர்தக்கரைசல், மீன்அமிலம் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 குழுக்களுக்கு இயற்கை இடுபொருள்

தயாரித்தல் மையம் அமைத்து ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

xv) விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப்போர்வை இயக்கத்தில் 24 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவினத்தில், ஒரு கோடியே 96 இலட்சம் மரக்கன்றுகள் 72,597 விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டன. விவசாய நிலங்களில் வளர்க்கப்படும் வேளாண் காடுகள், நிரந்தரப் பசுமைப் போர்வையினை உருவாக்குவதோடு, இலாபம் தரும் பண்ணைத் தொழிலாகவும் விளங்குகின்றன. 2024-2025-ஆம் ஆண்டில் தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்திடவும், மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றங்கால்களை வலுப்படுத்துவதற்காகவும் சிறிய, பெரிய, உயர் தொழில்நுட்ப (ஹை-டெக்) நாற்றங்கால்கள் அமைப்பதற்கு **வேளாண்காடுகள் திட்டத்தில், 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvi) ஒருங்கிணைந்த பண்ணையத்தினால், விவசாயிகள், பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பழ மரங்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளையும் மேற்கொண்டு தற்சார்புடன் கூடிய வாழ்வாதார முன்னேற்றத்தினை அடையமுடியும். கடந்த மூன்று ஆண்டுகளில், 40,888 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 142 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டு, 40,888 விவசாயிகள் பயனடைந்து அவர்களது வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. **2024-2025-ஆம் ஆண்டில்**

**14,000 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைத்திட, 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvii) தமிழ்நாட்டில் சுமார் 60 இலட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் சிறு, குறு விவசாயிகளால் சாகுபடி செய்யப்படும் இந்நிலங்கள் ஊட்டச்சத்துக் குறைபாடும், குறைந்த நீர்ப்பிடிப்புத்திறனும் கொண்டதாக உள்ளதால், நிலத்தடி நீர் குறைந்து பயிர் உற்பத்தித் திறனும் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

இம்மானாவாரி நிலங்களில் விவசாயிகள் இலாபகரமான பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏதுவாக, உழவு மேற்கொள்ளவும், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் பயிரிட விதைகளும் வழங்கப்படும். 2024-2025-ஆம் ஆண்டில், மூன்று இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தை செயல்படுத்த, **36 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xviii) காய்கறிகள், பழங்களின் தினசரி நுகர்வு மக்களிடையே மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, வீட்டுத் தோட்டத்தில் ஊட்டச்சத்துமிக்க பழச்செடிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு வாழை, பப்பாளி, முருங்கை, கறிவேப்பிலை போன்ற செடிகள் வழங்கப்படும். இதனால் பூச்சிக் கொல்லிகள் இல்லாத, நச்சுத்தன்மையற்ற பழங்கள், காய்கறிகள் கிடைக்கும். இத்திட்டத்திற்கென **4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xix) “**தேனீக்களின் தனித்துவம் அவை தித்திக்கும் தேனைத் திரட்டுவதால் மட்டுமல்ல; மலர்களுக்குள் மகரந்தச்சேர்க்கை நிகழ்த்துவதால்தான்**”. மக்களின் உடல்நலத்தில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், **3 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் தேனீ முனையம் உருவாக்கப்படும்.** இத்திட்டத்தில், தேன் பரிசோதனைக் கூடமும் தேன், தேன் சார்ந்த பொருட்களைப் பதப்படுத்தும் கூடங்களும் அமைக்கப்பட்டு, தேனீ வளர்ப்போர்க்கு உரிய பயிற்சிகளும் அளிக்கப்படும்.

xx) **காலநிலை மாற்றம்,** அடுத்த 20 ஆண்டுகளில் பல்லுயிர்ப் பரவல், பயிர் உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும், வேளாண் உற்பத்தியைக் குறையாமல் பாதுகாத்திடவும், உரிய தொழில்நுட்பங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதற்காக, தமிழ்நாட்டில் சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்கி, இத்தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்டோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பரவலாக்கம் செய்யப்படும். இதற்கென, **ஒரு கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxi) வேளாண்மையில் நீடித்த உற்பத்தித் திறனைப் பெற்றிட மண்ணின் தொடர்ச்சியான வளமைத்திறன், நிலையான உற்பத்தித்திறன் ஆகியவை

மதிப்பிடப்படவேண்டும். மண்ணிலுள்ள கரிமச்சத்து, நுண்ணுயிர்களின் கலவை ஆகியவற்றைப் பொறுத்தே மண்ணின் வளம் அமைகிறது. மண்ணின் வளத்தை மேம்படுத்திட **பயிர்க்கழிவுகள் உள்ளிட்ட கரிமப் பொருட்களை வேகமாகச் சிதைத்து** கரிமச்சத்தின் அளவை உயர்த்தவும், கிடைக்காத நிலையிலுள்ள **சத்துகள் கிடைக்கப் பெறவும்,** பயனுள்ள நுண்ணுயிர்க் கலவையை உருவாக்கிட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் செயல்திறனும் மதிப்பிடப்படும். இதற்கென, **ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxii) உழவர்சந்தைகளில் விற்பனை செய்வதைப் போன்று தரமான வேளாண் விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப்புர நுகர்வோரைச் சென்றடைய, நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளின்படி விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, தரம்பிரித்து, சிப்பம்கட்டி, முத்திரையிட்டு விற்பனை செய்ய ஏதுவாக **100 உழவர் அங்காடிகள், 5 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.**

**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், 2024-2025-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். 2024-2025-ஆம் ஆண்டிற்கு மொத்தம் 206 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**